# பனிமயம்

சனவரி 2024



ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

வெள்ளி விழா
ஆண்டுச்
சிறப்பிதழ்
2



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இரக்கம் நிறைந்த ஆண்டவர் நம்மை **2024** என்னும் புதிய ஆண்டிற்குள் அழைத்து வந்திருக்கிறார். அவருக்கு நன்றியையும், புகழ்ச்சிகளையும் செலுத்துகிறேன். உங்கள் அனைவருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துகளையும், ஆசிகளையும் உரித்தாக்குகிறேன்.

**“கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக”** (2 கொரி 9:15) என்னும் இறைமொழியையே இந்தப் புதிய ஆண்டுக்கான ஆசிமொழியாக புனித பனிமய அன்னைத் திருத்தலப் பேராலயத்திலிருந்து உங்களுக்கு வழங்குகிறேன். கடந்த 2023ஆம் ஆண்டை நன்றியுடன் திரும்பிப் பார்க்கிறோம். தங்கத் தேர்ப் பெருவிழா கொண்டாடிய பனிமய அன்னைப் பேராலயத்துக்கும், பனிமயத் தாயின் திருப்பெயரில் திருமணம் செய்துகொண்ட 25 மண இணையர்களுக்கும், 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் நம் “பனிமயம்” இதழுக்கும், ஏன் நம் அனைவருக்குமே 2023ஆம் ஆண்டு கடவுளின் கொடையாக அமைந்ததை நாம் அறிவோம். அவரது எல்லையில்லாப் பரிவின் ஆசிகளுக்காக இந்த ஆண்டு முழுவதும் நாம் நன்றி செலுத்துவோமாக.

ஆம், நன்றிதான் இந்த ஆண்டு முழுவதும் நம் வாழ்வின் அடிநாதமாகத் திகழ வேண்டும். நன்றி பெருகப் பெருக, இறையருளும் பெருகும் என்பதை நாம் மறவாதிருப்போம். “நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் **எல்லாவற்றிற்காகவும் எப்போதும்** தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்” (எபே 5:20) என்னும் பவுலடியாரின் அறிவுரையை நம் இதயத்தில் பதிப்போம்..

“கடவுளாகிய ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகின்றோம்; ஏனெனில் நீர் **உமது பெரும் வல்லமையை** வெளிப்படுத்தி ஆட்சி செலுத்தலானீர்” (திவெ 11:17) என்னும் இறைமொழிக்கேற்ப, இந்தப் புதிய ஆண்டில் கடவுளின் பெரும் வல்லமை இன்னும் அதிகமாக வெளிப்படும் என்று நம்புவோம்..

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 25 தாரகை 5

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**திருஅவையில் பன்முகத்தன்மை எனும் கொடைக்காக...**

கிறித்தவக் குழுமத்துக்குள் இருக்கும் பல்வேறுபட்ட தனி வரங்களின் கொடையைக் கண்டுணரவும், கத்தோலிக்கத் திருஅவையில் இருக்கும் பல்வேறு மரபுகள் மற்றும் சடங்குகளின் செழுமையைக் கண்டுபிடிக்கவும் நமக்குத் தூய ஆவியார் உதவிட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் 2


1. நற்செய்தியின் சுருக்கமே திருச்செபமாலை . . . 4
   அருள்பணி. ஜோமிக்ஸ்
2. அன்னை மரியா குருமாணவர்களின் தாய் . . . . 6
   அருள்சகோதரர். மி. பெல் கிளின்டன்
3. செபமாலைப் புனிதர்கள் . . . . . . . . . . . . . . . 8
   திருமதி. அமலோரா பிரிட்டோ
4. மரியன்னையின் முன்னோடிகள் - தெபோரா! . 10
   அருள்பணி. குமார்ராஜா
5. பனிமயம் - மீள் பார்வை. . . . . . . . . . . . . . . 12
   கலாபன் வாஸ்
6. பனிமயமே! அருள்துளியே!! . . . . . . . . . . . 14
   ஆழிபுத்திரன்
7. பனிமய பங்குத் தந்தையர் . . . . . . . . . . . . . 15
8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . 16
9. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . 19
10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 20
11. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . 24
12. பனிமயம் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் . . . . . . . . 25

# நற்செய்தியின் சுருக்கமே திருச்செபமாலை



### திருச்செபமாலையும் அன்னை மரியாவும்

திருச்செபமாலையின் அமைப்பையும் செபங்களையும் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போதே இது திருவிவிலிய அடிப்படையிலானது என்றும், குறிப்பாக நற்செய்தி நூல்களை ஆதாரமாகக் கொண்டது என்றும் யாவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

### கிறிஸ்து மைய மறையுண்மைகள்

திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் அவர்களால் புதிதாகப் பரிந்துரைக்கப்பட்ட ஒளியின் பேருண்மைகளையும் சேர்த்து கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் நற்செய்தியின் நம்பிக்கை அடிப்படையிலான 20 பேருண்மைகள் செபமாலையில் தியானிக்கப்படுகின்றன. கிறிஸ்துவோடு இணைந்துள்ள வாழ்வுதான் கிறிஸ்துவ ஆன்மீக வாழ்வாகும். கிறிஸ்துவோடு இணைந்தால் மட்டுமே மரியாவின் வாழ்வும் சிறப்பும் உயர்வடைகின்றது. மரியாவுக்குச் சூட்டப் பட்டிருக்கும் பட்டங்களும் பெருமைகளும் கிறிஸ்துவோடு இணைந்துதான் பொருளுடையதாகின்றன.

இந்தப் பூமியில் வாழ்ந்தவர்களில் மிக அதிகமாக இயேசுவோடு நெருங்கி இணைந்தவர்களுள் மரியாவைத் தவிர வேறு எவரும் முன்னிலை பெற முடியவே முடியாது. ஆதலின் மரியாவின் வழியாக இயேசுவை நெருங்கிச் செல்வது ஆன்மீகத்தின் ஓர் உன்னத வழியாகும். இப்பேருண்மைகளில் மரியாவின் வழியாக நாம் இயேசுவைத் தியானிக்கின்றோம்.

அன்னை தெரசாவின் வார்த்தைகளில் சொல்வதென்றால், “நாம் செபமாலை செபிக்கும்போது கிறிஸ்துவின் வாழ்வை மீண்டும் வாழ்கிறோம்” என்பதாகும். நற்செய்தி நூல்களில் இப்பேருண்மைகள் பற்றிய விளக்கங்கள் விரிவாகத் தரப்படுகின்றன. ஆதலால்தான் நம் திருத்தந்தையும் “திருச்செபமாலை நற்செய்தியின் சுருக்கம்” என்று தம் திருமடலில் குறிப்பிடுகின்றார்.

### திருத்தூதர்களின் நம்பிக்கைகள்

திருத்தூதர்களின் விசுவாசப் பிரமாணம் என்னும் செபத்துடனே திருச்செபமாலை தொடங்குகின்றது. 12 மறை உண்மைகளைக் கொண்டுள்ள இச்செபத்தை ஆழ்ந்து நோக்கும்போது இது திருச்சபையின் மாபெரும் நம்பிக்கைக் கேட்பாடுகளின் சுருக்கம் என்பது தெளிவாகின்றது. மேலும் இவ்வுண்மைகள் அனைத்தும் நற்செய்தி அறிவுரையின் அடிப்படைகள் என்பதும்

புலனாகின்றது. வரையறுக்கப்பட்ட இந்நற்செய்தி உண்மைகளை மீண்டும் மீண்டும் வாய்விட்டு அறிக்கையிடும்போது பாரம்பரியமான இக்கோட்பாடுகளை நாமும் நமது காலத்தில் வாழ்விலும் கலாச்சாரத்திலும் ஏற்றுக் கொள்கிறோம் என்பது உறுதியாகிறது.

### இயேசு கற்றுத் தந்த செபம்

விண்ணகக் கடவுளைத் தூரத்திலேயே இருப்பவராக அல்லாமல் அண்மையில் உறவுடன் இருப்பவராக இயேசு கண்டார். ஆதலின் அவர் கடவுளை "அப்பா, தந்தாய்" என்று அழைத்தார். இயேசு கற்றுத் தந்த இந்த செபம்தான் செபங்களிலெல்லாம் எடுத்துக்காட்டான மிக உயர்ந்த செபமாக இருக்கிறது. நற்செய்தி நூல்களிலிருந்து நேரிடையாகவும் முழுமையாகவும் எடுக்கப்பட்டுள்ள இச்செபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதால் கிறிஸ்துவின் வார்த்தைகளிலேயே தூய ஆவியின் தூண்டுதலால் நாம் செபிக்கின்றோம் என்றாகிறது.

### மங்கள வார்த்தை செபம்

பழைய ஏற்பாட்டில் கடவுளை யூதர்கள் "ஆபிரகாமின் கடவுளே" என்று அழைத்தார்கள். புதிய ஏற்பாட்டு மக்களாகிய நாமோ அவரை "மரியாவின் கடவுள்" என்று அழைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் மூவொரு கடவுள் பற்றிய உண்மையையும் வார்த்தையானவர் நாம் தொட்டுப் பார்க்கக்கூடிய ஒரு மனிதராக உடலெடுக்க முடியும் என்னும் நம்பிக்கையையும் மங்கள வார்த்தை நிகழ்விலே மரியா வெளிப்படுத்தினார்.

மேலும் மங்கள வார்த்தைச் செபத்தின் முதல் பகுதியில் கன்னிமரியாவுக்குக் கபிரியேல் தூதரும், எலிசபெத்தும் கூறிய வாழ்த்து இடம் பெறுகின்றது (லூக் 1:28-42). இது மரியாவில் நிகழ்ந்த மனுவுரு எடுத்தல் மறைபொருளை வழிபடும் நிலையில் தியானிப்பதாய் அமைகின்றது. விண்ணக மண்ணக வியப்பை இச்சொற்கள் வெளிப்படுத்துகின்றன.

### மூவொரு இறைவன் திருப்புகழ் செபம்

கிறிஸ்துவச் செபங்களுக்கெல்லாம் அடிப்படையானது தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மகிமை உண்டாவதாக என்னும் மூவொரு இறைவனின் திருப்புகழ் ஆகும். மேலும் இதுதான் கிறிஸ்துவத் தியானத்தின் குறிக்கோள் ஆகவும் இருக்கின்றது. தூய ஆவியுடன் இருக்கும் தந்தையிடம் நம்மை அழைத்துச் செல்லும் வழி கிறிஸ்துவே.

பழைய ஏற்பாட்டில் மங்கலாகவும் மங்கள வார்த்தை நிகழ்வில் முதல் முறையாகவும், இயேசுவின் திருமுழுக்கில் முழுமையாகவும் மூவொரு இறைவன் வெளிப்படுத்தப் பட்டுள்ளார். ஆகவேதான் நாம் "முதலாகி முடிவாகி முழுதான அன்பாகி மூன்றாகி ஒன்றான இறைவன்" என்று பாடுகின்றோம். தொடக்கமும் முடிவுமாய் அமைகின்ற மூவொரு இறைவனுக்கே எல்லாப் புகழும் ஆராதனையும் நன்றியும் உரித்தாகுக (காண். திபா 115:1-2).

திருச்செபமாலையில் இறைவார்த்தை இடம் பெறுகிறது. இயேசுவின் வாழ்வில் நடந்த மறை நிகழ்ச்சிகள் இருபது பேருண்மைகளாகத் தியானிக்கப்படுகிறது. இப்பேருண்மைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. மேலும் இவை அனைத்தும் இயேசுவில் விளைந்த மீட்பை எளிய முறையில் சுருக்கித் தருகின்றன. திருச்செபமாலையில் அமைதிக்கும் இடம் இருக்கிறது. ஒவ்வொரு பத்து மணி முடிவிலும் ஒரு சிறிய சொந்தச் செபம் இடம் பெறுகிறது. இவையெல்லாமே செபத்தின் திருவிவிலியப் பண்புகள் எனலாம்.



அருள்பணி. ஜோமிக்ஸ்

# அன்னை மரியா குருமாணவர்களின் தாய்



அன்னை மரியா திருஅவையின் தாய் மற்றும் குருக்களின் தாய் என அழைக்கப் படுவதை நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் “அன்னை மரியா **குருமாணவர்களின் தாய்**” என்ற சொற்றொடர் நமக்கு புதியதாக தோன்றலாம். அன்னை மரியா குரு மாணவர்களின் தாய் என அழைக்கப் படுவதற்கான காரணங்களைக் காண்போம்.

‘தாய் இல்லாமல் நான் இல்லை’ எனத் தொடங்கும் திரைப்படப் பாடலின்; ‘எனக்கொரு தாய் இருக்கின்றாள் என்றும் என்னைக் காக்கின்றாள்’ என்னும் வரிகள் குருமாணவர்களாகிய எங்களுக்குப் பொருந்தும். தங்களுடைய மண்ணக அம்மாக்களைப் பிரிந்து பன்னிரண்டு ஆண்டு காலம் வெளியூரில் உள்ள குருமடங்களில் பயிலும் குரு மாணவர்களைத் தேற்றுவது இந்த வரிகள்தான் அந்தத் தாய் வேறு யாரும் இல்லை இத்தரணியில் பெண்ணாய்ப் பிறந்து புனிதையாய் வாழ்ந்து இறைமகனை வளர்த்து எடுத்த அன்னை மரியாதான்.

மானிடர் அனைவருக்கும் தாயாய் இருக்கின்ற அன்னை மரியா குருமாணவர்களுக்கும் தாயாக இருக்கின்றார். ஆனால் அன்னை மரியாவின் பார்வையில் குருமாணவர்கள் சற்று சிறப்புமிக்கவர்கள். காரணம் இயேசுவின் பணி வாழ்வினைப் பார்த்து அவரின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு அவரோடு இருக்கவும் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடரவும் தங்களுடைய குடும்பங்களை விட்டுவிட்டு வந்தவர்கள்தான் இயேசுவின் சீடர்கள். சீடர்களின் வழி மரபினராக இறைவார்த்தையைக் கேட்டும் வாசித்தும்

தியானித்தும் சீடர்களைப்போல அவரது பணியைத் தொடர சிறுவர்களாக இருக்கும்போதே நாங்கள் குருமடங்களில் சேருகின்றோம். அதனால் இயேசு கிறிஸ்துவுக்கு சகோதரர்கள் ஆகின்றோம். அவருடைய தாயான அன்னை மரியா எங்களுக்கும் தாயாகின்றார்.

குருமாணவர்கள் பயிலும் குருமடங்களுக்கு அருகில் எத்தனையோ ஆலயங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தலங்கள் இருந்தாலும் எங்கள் இதயம் தேடுவது அன்னையின் ஆலயத்தையே. அங்கு எரிகின்ற மெழுகுவர்த்தியோடு சேர்த்து எங்களது சுமைகளை அன்னையிடம் கூறி மெழுகுபோல் கரைத்து விட்டு குருமடங்கள் திரும்புவோம்.

மரியன்னையின் தயவு இன்றி குருவாக முடியும் என்பது இறக்கை இல்லாமல் பறவையால் வானில் உயர பறக்க முடியும் என்பதற்கு சமம். குருப்பட்ட நிகழ்வின்போது மறை மாவட்ட முதன்மைக்குரு “இவர் பயின்ற குருமடங்கள் குருவாக இவர் தகுதியுள்ளவர் என்று பரிந்துரைத்ததன் மூலம் சான்று பகிர்கின்றேன்” என்று அறிக்கையிடுவார். உண்மையில் நாங்கள் பயின்ற குருமடங்களோடு சேர்த்து கானாவூரில் புதுமை செய்ய தன் மகனிடம் பரிந்து பேசிய அன்னை அவருடைய சிறப்புமிக்க குழந்தைகளாகிய எங்களுக்காகத் தன் மகனிடம் பரிந்து பேசுகிறார். ஆம் அன்னையன்றி அணுவும் அசையாது.

மலையில் உள்ள கல்லை யாரும் மதித்து வணங்குவதில்லை. அக்கல் சிற்பியின் கை பட்டு சிலையாகும்போது அதற்கான மதிப்பு கூடுகிறது. அந்த கல்லைப் போலத்தான் நாங்களும் செதுக்கப்படுகிறோம். செதுக்கப்படும் இந்தப் பயிற்சி காலத்தில் வலிகளும் போராட்டங்களும் ஏராளம்.

தத்துவயியல் பயில பிறந்த மண்ணை விட்டு பக்கத்து மாநிலத்தில் உள்ள பெங்களூருவுக்கு சென்றபோது அங்குள்ள மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் என அனைத்தும் புதியதாக இருந்தன. சக மாணவர்கள் கூட இருந்தும் வெறுமையையும் தனிமையையுமே உணர்ந்தேன். மனம் கலங்கி நின்றேன்.

ஒருநாள் தற்செயலாக சிவாஜி நகருக்குச் சென்றபோதுதான் அங்குள்ள அன்னையின் பேராலயத்திற்கு செல்ல நேர்ந்தது. என் மனக் குமுறல்களையும், மனக்கவலைகளையும் யாரிடம் கூறுவது என்று கலங்கி நின்ற எனக்கு அன்னை மரியாவின் அன்பும் அரவணைப்பும் கிடைத்தது. ஆம், அன்று ‘மகனே நான் இருக்கிறேன் உன் தாய்’ என்று ஒரு குரல் என் மனதிற்குள் ஒலித்தது. இரக்கமும் கனிவும் நிறைந்த அன்னையின் பாசக் கண்கள் என்னை அழைத்தன. பின்பு ஜெபமாலை ஜெபித்து விட்டு குருமடம் திரும்பினேன்.

அன்று முதல் நான் தத்துவயியல் முடிக்கும்வரை அன்னை என் அருகில் இருப்பது போன்ற ஓர் உணர்வு இருந்தது. அதன் பின்னும் நான் அன்னையின் அரவணைப்பில் வளர வேண்டுமென நினைத்து என்னைப் பனிமய அன்னை ஆலயத்திற்கு அழைத்து வந்தார். இன்று நான் நல்ல மகிழ்ச்சியான குருமாணவனாக இருப்பதற்கு காரணம் அன்னைதான்.

குருமாணவர்களாகிய நாங்கள் அழைத்தலில் நிலைத்திருப்பதற்கு காரணம் அன்னையின் மீது நாங்கள் கொண்ட தீராத காதலும் அன்னை எங்கள் மீது கொண்ட தீராத காதலும் தான். கதிரவன் இல்லாது பகலில்லை, சந்திரன் இல்லாது இரவில்லை, மேகம் இல்லாது மழையில்லை, அலை இல்லாத கடலில்லை, போட்டி இல்லாத வாழ்வில்லை. அன்னையே நீயின்றி நாங்களில்லை. உன் பாசம் இல்லையே குருமட வாழ்க்கை இல்லை. குரு மாணவர்களின் தாயே வாழ்க!



**அருள்சகோதரர்.**
**மி. பெல் கிளன்டன்**

# செபமாலைப் புனிதர்கள்



திருச்சபையின் அனைத்துப் புனிதர்களுமே மரியன்னைப் பக்தி நிறைந்தவர்கள்தாம். இருப்பினும், அவர்களில் ஒரு சிலரை சிறப்பாக மரியன்னைப் புனிதர்கள் என அழைக்கிறோம். அதுபோலவே, ஒரு சிலர் செபமாலைமீது மிகுந்த பற்று கொண்டிருந்தனர். செபமாலை வழியே எண்ணிலடங்கா இறையாசிகளைப் பெற்றுக்கொண்டனர். நமது வாழ்வுக்கும் ஒரு பாடமாக அமைகின்றனர்.



**1. புனித லூயி மரிய மான்ட்ஃபோர்ட்.** செபமாலைமீது மிகுந்த பற்று கொண்டிருந்த ஒரு புனிதர். "உங்கள் வாழ்நாள் முழுதும் செபமாலையை உண்மைப் பக்தியோடு செபித்தால், நீங்கள் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும், ஆண்டவரால் மீட்கப்படுவீர்கள்" என்று உறுதிபடக் கூறினார்.



**2. புனித பாத்ரே பியோ.** ஐந்து காய வரம் பெற்ற இந்தக் கப்புச்சின் துறவி செபமாலையை அன்புடன் செபிக்கும் பழக்கம் கொண்டவர். "இன்றைய காலகட்டத்துக்குத் தேவையான ஆயுதம் செபமாலை" என்று சொன்னவர். இன்றைய ஆன்மீக, சமூகச் சிக்கல்கள் அனைத்தையும் செபமாலை செபித்தே மேற்கொள்ளலாம் என்று நம்பியவர்.




**3. புனித பிரான்சிஸ் சலேசியார்.** "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் செபத்தை மன்றாடியதால், வியத்தகு முறையில் குணம் பெற்று, குருவாகி பின்னர் ஆயரானவர். "செப முறைகளிலெல்லாம் சிறந்த செப முறை செபமாலை செபிப்பதே" என்று துணிவுடன் சொன்னவர்.



**4. புனித அல்போன்ஸ் லிகோரியார்.** "திருச்சபை ஏற்பிசைவு செய்த செபங்கள் அனைத்திலும் ஏராளமான புதுமைகளைச் செய்யும் ஆற்றல் மிக்க செபம் செபமாலையே" என்று மொழிந்தவர் புனித லிகோரியார்.




**5. புனித பத்தாம் பத்திநாதர்.** இந்தப் புனித திருத்தந்தை செபமாலையை மிகவும் நேசித்தவர். "குடும்பமாக செபித்து இறையருளைப் பெற்றுக்கொள்வதற்கு செபமாலையைவிட உறுதியான செபம் வேறில்லை" என்று அறிக்கையிட்டவர். "அன்னை மரியாவின் இதயத்திற்கு உகந்த செபம் இதுவே. எனவே, நாள்தோறும் செபமாலையை செபிக்க வேண்டும்" என்பது இவரது நம்பிக்கை.



**6. புனித ஜோஸ் மரியா எஸ்க்ரீவா.** “செபமாலை என்பது வியத்தகு ஓர் ஆயுதம். அதனை நம்பிக்கையுடன் செபித்தால் வியத்தகு பலன்களைப் பெறலாம்” என்பது இந்தப் புனிதரின் வாக்கு. “செபமாலையை அன்புடனும், நம்பிக்கையுடனும் செபித்து வந்தால், நம் அன்னை உங்களைத் தம் திருமகனின் பாதையில் வழிநடத்துவார்” என்றும், “செபமாலை செபிக்க நேரமே இல்லையென்றால், தெருவில் நடக்கும்போதுகூட யாருக்கும் தெரியாமல் நாம் செபமாலை செபிக்க முடியும்” என்பது இவரது அனுபவம்.



**7. புனித ஒன்பதாம் பத்திநாதர்.** “செபமாலை செபிக்கும் ஒரு ராணுவத்தை எனக்குத் தாருங்கள். நான் இந்த உலகை வென்று காட்டுகிறேன்” என்று துணிந்து சொன்னவர் இந்தத் திருத்தந்தை.



**8. புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல்.** எழுந்தேற்றம் செய்யப்பட்ட நற்கருணை ஆண்டவர்முன் முழங்கால் படியிட்டு செபமாலை செபிப்பதைப் பழக்கமாகக் கொண்டவர் இந்தத் திருத்தந்தை. “செபமாலை என்பது மேலோட்டமாக மரியன்னையை மையப்படுத்திய செபம்போலத் தோன்றினாலும், உண்மையில் அது இயேசுவை மையப்படுத்திய மன்றாட்டே” என்பது இவரது வாதம்.



**9. புனித அன்னை தெரசா.** செபமாலையைக் கையில் வைத்திராத அன்னை தெரசாவின் படத்தை நாம் பார்க்கவே முடியாது. எப்போதும் செபமாலையைக் கையில் ஏந்திய ஒரு புனிதை



**10. முத்திப்பேறுபெற்ற ஆலன் டிலா ரோச்.** “செபமாலை செபிக்கும்போது விண்ணகத் தூதர்கள் மகிழ்கின்றனர். மூவொரு கடவுள் மாட்சியடைகின்றார். திருப்பலிக்கு அடுத்ததாக மிகச் சிறந்த செபம் செபமாலையே” என்று அன்னை மரியாவே தமக்கு வெளிப்படுத்தியதாகப் பகிர்ந்துகொண்டவர் ஆலன் டி லா ரோச்.

இத்தனை புனிதர்களும் போற்றிப் பெருமைப்படுத்தி, தங்கள் வாழ்வில் கடைப்பிடித்த செபமாலை செபிக்கும் பழக்கத்தை நாமும் பின்பற்றுவோமா!



திருமதி. அமலோரா பிரிட்டோ

*மரியன்னையின் முன்னோடிகள்: 6*



# நீதித் தலைவி தெபோரா!



பழைய ஏற்பாட்டின் புகழ்பெற்ற பெண்மணிகள் அனைவருமே அன்னை மரியாவுக்கு முன்னோடிகளாகத் திகழ்கிறார்கள் எனத் திருஅவைத் தந்தையர், விவிலிய அறிஞர்கள் போதித்துள்ளனர், எழுதியுள்ளனர். அந்த வரிசையில் நீதித் தலைவர்கள் நூலில் நாம் காணும் தெபோராவும் மரியன்னையின் முன்னோடியாகப் பல கோணங்களில் காட்சி தருகிறார்.

யார் இந்த **தெபோரா?** இஸ்ரயேலர்களின் முதல் பெண் நீதித் தலைவர் என்ற பெயருக்குச் சொந்தக்காரர்தான் இந்த தெபோரா. இவரை நீதித் தலைவர்கள் நூலில் சந்திக்கிறோம். தெபோரா என்னும்; பெயருக்குத் "தேனீ" என்று பொருளாம். தேனீயைப் போல சுறுசுறுப்பாக செயல்பட்டதாலும். ராணித் தேனீயைப் போலத் தலைமையேற்றதாலும் பொருத்தமான பெயரே.

தெபோராவைப் பற்றிய செய்திகள் நீதித் தலைவர்கள் நூலின் நான்காம், ஐந்தாம் அதிகாரங்களில் மட்டுமே சொல்லப் பட்டிருக்கின்றன. அதற்கு முன்னரோ, பின்னரோ அவரது பெயர்கூட சொல்லப்படவில்லை. இருப்பினும். இந்த இரண்டு அதிகாரங்களிலும் தெபோராவின் ஆளுமையும், பெருமையும் நன்றாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

நீதித் தலைவர்கள் நூலில் 12 தலைவர்களைப் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பன்னிருவரில் நான்காவதான தெபோரா ஒரே பெண் நீதித் தலைவர் என்ற பெருமைக்குரியவராக விளங்கினார். அதே வேளையில் ஓர் இறைவாக்கினராகவும் திகழ்ந்தார் தெபோரா. பழைய ஏற்பாட்டில் நீதித் தலைவராகவும், இறைவாக்கினராகவும் இருந்த ஒரே பெண் என்ற பெருமைக்குரியவரானார் தெபோரா. ஆண்களில் இறைவாக்கினர் சாமுவேல் மட்டுமே இந்த இரட்டைப் பட்டங்களுக்குச் சொந்தக்காரராயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தெபோரா ஓர் இறைவாக்கினராகவும் இருந்ததால், கடவுளின் திருவுளத்தை அறிந்திருந்தார். இஸ்ரயேல் மக்கள் கடவுளின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்ததால், கானானிய மன்னன் யாபினிடம் ஆண்டவர் அவர்களை ஒப்படைத்திருந்தார் (நீத 4:1-2). அவன் இருபது ஆண்டுகள் இஸ்ரயேலரைக் கடுமையாக ஒடுக்கினான். எனவே, இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டனர்.

எனவே, தெபோரா வழியாகக் கடவுள் பாராக் என்னும் மாவீரனை அழைத்தார். "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உமக்குக் கட்டளையிடுகிறார்" (நீத 4:6) என்று சொல்லி, பத்தாயிரம் வீரர்களைத் திரட்டி யாபினின் படைத்தலைவன் சீசராவைத் தோற்கடிக்க உத்தரவிடுகிறார் தெபோரா. அப்போது பாராக்கு தெபோராவிடம், "நீர் என்னுடன் வந்தால், நான் செல்வேன். நீர் என்னுடன் வராவிடில் நான் செல்லமாட்டேன்" (நீத 4:8) என்றார். பாருங்கள், தெபோரா என்னும் பெண்ணின் பெருமையை! பின்னர் நடைபெற்ற போரில் சீசராவின் படையினர் தோற்கடிக்கப்பட்டனர்.

போரில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தெபோராவும் பாராக்கும் பாடிய **வெற்றிப் பாடல்** நீதித் தலைவர்கள் ஐந்தாம் அதிகாரம் முழுவதும் (நீத 5:1-31) 31 இறைமொழிகளில் தரப்பட்டிருக்கிறது. "நான் ஆண்டவருக்குப் பண் இசைப்பேன். இஸ்ரயேலரின் கடவுளாகிய ஆண்டவரின் புகழ் பாடுவேன்" (நீத 5:3) என்னும் இந்தப் பாடல் தெபோராவை ஒரு கவிஞராகவும், பாடகியாகவும் காட்டுகிறது.

இத்தனைப் பெருமைகளுக்கும் சொந்தக்காரரான தெபோரா எப்படி மரியன்னையின் முன்னோடியாகத் திகழ்கிறார்?

**1. இறைவழியில் நடக்க வழிகாட்டுதல்.** எப்படி தெபோரா நீதித் தலைவியாக இருந்து இஸ்ரயேல் மக்களை வழிநடத்தினாரோ, அதுபோலவே அன்னை மரியாவும் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் திருத்தூதர்களுக்கும், சீடர்களுக்கும் தாயாக இருந்து அவர்களை வழிநடத்தினார். பெந்தகோஸ்தே பெருவிழாவின்போது தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அவர்களோடு இணைந்து இறைவேண்டல் செய்தார். இன்றும் அன்னை மரியா திருஅவையின் தாயாகத் திகழ்ந்து, நமக்கு வழிகாட்டியாய் இருக்கிறார்.

**2. புதிய பாராக்காம் இயேசுவை வழிநடத்தினார்.** தெபோரா அபினோவாமின் மகன் பாராக்கை அழைத்து, பத்தாயிரம் வீரர்களைச் சேர்க்கக் கட்டளையிடுகிறார். "யாபினின் படைத்தலைவன் சீசராவையும் அவன் தேர்களையும் படையையும் உம் கையில் கொடுப்பேன்" (நீத 4:6-7) என்றார். அவ்வாறே, பாராக்கின் தலைமையில் இஸ்ரயேலர் மாபெரும் வெற்றி பெற்றனர். அன்னை மரியாவும் தம் மகன் இயேசுவை வளர்த்து, வழிநடத்தி தீமையின் ஆற்றல்களை வெற்றிபெறச் செய்தார்.

**3. தெபோராவின் வெற்றிப் பாடல்.** கானானிய மன்னன் யாபினை இஸ்ரயேல் மக்கள் தோற்கடித்ததும், தெபோராவும், பாராக்கும் ஒரு வெற்றிப் பாடல் பாடினார்கள். நீதித் தலைவர்கள் நூலின் ஐந்தாம் அதிகாரம் முழுவதும் (5:1-31) நிரம்பியிருக்கும் இந்தப் பாடல் அன்னை மரியாவின் பாடலுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. "நான் ஆண்டவருக்குப் பண் இசைப்பேன். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரின் புகழ்;பாடுவேன்" (5:3) என்று தொடங்கும் இந்தப் பாடல் "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது" (லூக் 1:47) என்ற அன்னையின் பாடலை ஒத்துள்ளது. அதே பாடலின் "தெபோரா, நீ எழும்பும்வரை, இஸ்ரயேலின் தாயாகத் தோன்றும்வரை, இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்விழந்து கிடந்தன" (5:7) என்னும் வரிகள் அன்னை மரியாவைப் புதிய தெபோராவாகக் காட்டுகின்றன அல்லவா?

பாராக்கோடு இணைந்து கானானியரைத் தோற்கடித்த தெபோரா போலவே, இயேசுவோடு இணைந்து அலகையைத் தோற்கடித்தார் அன்னை மரியா. எனவே, அவரை "இணை மீட்பர்" என அழைப்பது பொருத்தமானதே என்றுகூட சில மரியியல் சிந்தனையாளர்கள் எண்ணுகின்றனர்.

இஸ்ரயேலருக்கு நீதி வழங்கத் தேவையான ஞானத்தை தெபோராவுக்குத் தூய ஆவியார் வழங்கியதுபோலவே, மரியாவையும் தூய ஆவியார் நிரப்பி அவரை ஞானம் நிறை கன்னியாக மாற்றினார் என்றும் இருவரையும் ஒப்பிட்டு எழுதியுள்ளார் இவர்கள்.

தீர்ப்புப் பெறுவதற்காக இஸ்ரயேலர் தெபோராவிடம் சென்றது (நீத 4:5) போலவே, நியாயம் பெறுவதற்காக, நன்மைகளைப் பெறுவதற்காக கிறிஸ்தவர்கள் மரியன்னையிடம் செல்கின்றனர் என்கிறது இன்னொரு ஒப்பீடு.

இவ்வாறு, நீதித் தலைவியான தெபோரா அன்னை மரியாவின் முன்னோடியாகத் திகழ்கிறார். எனவே, மரியன்னையைப் "புதிய தெபோரா" எனவும் நாம் அழைக்கலாம்.



அருள்பணி. குமார்ராஜா

# 'பனிமயம்' 2019 – மீள் பார்வை

40

✶ புத்தாண்டின் தொடக்கத்திலேயே "அன்னை மரியா இறைவனின் தாய்" என்ற முழக்கத்தோடு வீறுநடைபோட, திருஅவை நம்மை அழைக்கிறது. "நாம் யாரும் அனாதையல்ல, நமக்காக ஒரு தாய் என்றும் எப்பொழுதும் எங்கெங்கும் இருக்கின்றார்" – என்ற நம்பிக்கையோடு, புதிய கனவுகள், சவால்கள் மற்றும் தீர்மானங்களை எதிர்கொள்ளத் தயாராவோம், 'மரியா இறைவனின் தாய்' என்ற விசுவாசக் கோட்பாடு, நமக்காக மனுவுரு எடுத்த பேருண்மையைப் பறைசாற்றுகிறது. இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களும், விமர்சிப்பவர்களும் இயேசுவின் தெய்வீகத்தை மறுப்பவர்களாகத்தான் கருதப்படுவர். "வாக்கு மனிதரானார், நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) என்ற விவிலிய உண்மையை ஊறிய உரக்கச் சொல்லி நமது நம்பிக்கையை ஆழப்படுத்துவதுதான் "அன்னை மரியா இறைவனின் தாய்" – என்ற கோட்பாடாகும். – அருள்பணி. பாஸ்கர் அந்தோணி, சே.ச.

✶புத்தாண்டின் முதல் தினத்தை அன்னையின் ஆசீரோடும், இறை திருவிழாவோடும் ஆரம்பிப்போம். திருக்குடும்பத்தின் தலைவர் புனித யோசேப்பின் யூத மரபின்படி, இயேசு பிறந்த குகைக்கு யூத மதக் குருவை அழைத்து வந்து, இயேசுவிற்கு விருத்தசேதனம் செய்து, 'இயேசு' என்ற பெயரிட்ட நாளும், ஜனவரி முதல் நாள்தான். அன்று அமைதியின் தினத்தையும் உலகம் முழுவதும் நாடு, இனம், மொழி, நிறம் பார்க்காமல், புதிய வருடப் பிறப்பையும் கொண்டாடி, இறை ஆசீரையும், பெற்றோர் பெரியோர் ஆசீரையும் வேண்டுகிறோம். – ஆசிரியர் D. அற்புதசாமி.

## புத்தாண்டில் புதிய குடும்பமாலை

அன்பும் ஆன்மீகமும் சமமாகக் கலந்த குடும்பமே திருக்குடும்பம். அப்படிப்பட்ட திருக்குடும்பங்கள்தான் நம்முடைய கொண்டாட்டங்களின் அடித்தளம் என்றால் மிகையல்ல.

எல்லாரும் இணைந்து முயற்சித்தால், அழகான வானவில்போல் நம்முடைய குடும்பத்தையும் திருக்குடும்பமாக மாற்ற முடியும். அன்று நாசரேத் ஊரில் வாழ்ந்த திருக்குடும்பம் போல், நம்முடைய குடும்பமும் மாற இறைவனிடம் மன்றாடுவோம். – வினோதா அற்புதராஜ்.

## புத்தாண்டில் புதிய தீர்மானம்

ஒவ்வொரு புத்தாண்டும் வந்து வந்து போகின்றது.... ஆண்டொன்று போனால் வயதொன்று போகிறது. கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு புதிதாய் என்ன செய்யப் போகிறோம்? என்ன கற்றுக்கொள்ள / கற்றுக் கொடுக்கப் போகிறோம்?

பிறந்திருக்கும் இப்புத்தாண்டில் ஒரு தீர்மானம் எடுப்போம். என் பிள்ளைகளுக்கு நீதியை, ஒழுக்கத்தை, அறநெறியை, இறைப்பற்றை, நாட்டுப்பற்றை, மொழிப்பற்றை அன்றாடம் கற்றுத் தருவேன். வேதாகமத்தை, திருக்குறளை, அற நூல்களை தினமும் படிக்குமாறு பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவேன் என்று தீர்மானிப்போம். ஒவ்வொரு வீடும் இவ்வாறு தீர்மானித்தால், சமுதாயம் சோலையாக மாறும். ஏனெனில், நாளை நம் பேரப்பிள்ளைகள் இந்தச் சமுதாயத்தில் அச்சமின்றி வாழ வேண்டும். – எம். பவுல் ராஜ்.

## லூர்து மாதா காட்சி

அன்னை மரியா, கி.பி. 0040 முதல் கி.பி. 1990 முடிய, உலக அளவில் 297 முறை காட்சி கொடுத்துள்ளார்கள்! 1858 பிப்ரவரி 11ஆம் நாள் முதல், ஜூலை 16ஆம் நாள் வரை, பெர்னதத்திற்கு, அன்னை மரியா, பிரான்ஸ் தேசத்தில், லூர்து நகரில் மசபியேல் குகையில் 18

முறை காட்சி கொடுத்துள்ளார். லூர்து நகர் காட்சியை ஒவ்வொரு ஆண்டும், பிப்ரவரி 11ஆம் நாள் லூர்து அன்னைக்குத் திருவிழா கொண்டாடி மகிழ்கிறோம். - ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

**மாதாவின் செல்லப்பிள்ளை!**

"மரியன்னையைப் புகழ்வதைவிட, அவர்களைப் பின்பற்றுவதே அதிக முக்கியமானது" என்றவர் புனித குழந்தை தெரசா. அதுபோலவே, மரியன்னையின் மேன்மைகளை அளவுக்கதிகமாக எடுத்துரைக்கும் மறையுரைகளும் அவருடைய பொறுமையைச் சோதித்தன. அன்னையின் வாழ்வில் இடர்கள் ஏராளம் இருந்ததை மறந்துவிடக் கூடாது என்றார் தெரசா.

தாம், மாதாவின் மகள் என்பதில் பெருமகிழ்ச்சி கொண்டார் தெரசா. மாதாவிடம் செபிக்கும்போது, உங்களைவிட நான் அதிக மகிழ்ச்சியானவள். ஏனென்றால், இறைவனின் தாயையே என் தாயாகக் கொண்டவள் நான்!" என்று சொல்வாராம்.

நற்கருணை வாங்கும் வேளைகளில் எல்லாம், அன்னை மரியாவின் உதவியை நாடுவாராம். "விளையாடிவிட்டு வீட்டுக்கு வரும் அழுக்கான குழந்தையைப்போல நான் இருக்கிறேன். என்னைச் சுத்தப்படுத்தி, திருவிருந்திற்கு அனுப்புங்கள்" - என்று அன்னையிடம் மன்றாடுவாராம். - அருள்பணி. குமார்ராஜா.

**சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா**

ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு குறியீட்டு அடையாளம் (LAND MARK) உண்டு. இத்தாலிக்கு புனித பேதுரு பேராலயம்; அமெரிக்காவுக்கு சுதந்திர தேவி சிலை; பிரான்சுக்கு ஈபிள் கோபுரம்; ரஷ்யாவுக்குச் செஞ்சதுக்கமும், கிரேம்ளின் மாளிகையும்; இந்தியாவுக்கு தாஜ்மகால்; சென்னை மாநகருக்கு மெரினா கடற்கரை; மதுரைக்கு மீனாட்சியம்மன் கோயில்......... அடுக்கிக்கொண்டே போகலாம்.

தூத்துக்குடிக்கு அடையாளம், சந்த மரிய தஸ்நேவிஸ் என்ற பனிமய மாதா பசிலிக்கா.




**சிப்பிகுளம் என்ற சிறிய கடற்கரைக்** கிராமத்தவனாக எனது ஊரில் பார்த்த தூய வியாகுல மாதா கோயிலைவிட, பல மடங்கு பெரியதாக இருக்கும் தூத்துக்குடி பனிமய மாதா கோயிலை, முதன்முறையாக ஏழு வயதுச் சிறுவனாகப் பார்த்தபோது, வியப்பாயிருந்தது. **'பெரிய கோயில்'** என்று பெருமிதத்துடன் போற்றப்படுகிறதே!

1937இல் இந்த பெரிய கோயிலின் வெளிப்புற அமைப்புகளிலிருந்து, இன்று எவ்வளவோ மாற்றங்கள்! - கலாபன் வாஸ்.

**பனிமய மாதா பசிலிக்கா!**

1981இல் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற அருள்பணி லாம்பர்ட் மிராண்டா காலத்தில் ஆலயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும், பிற மத மக்களிடம் காணப்பட்ட அன்னை பனிமயத்தின்மேல் உள்ள பக்தியையும் வலியுறுத்தி, அருள்தந்தை லாம்பர்ட் மிராண்டாவின் பெருமுயற்சியால், ஆலயம் பேராலயமாக (BASILICA) பிரகடனப்படுத்தப் பட்டது. - **செல்வராஜ் மிராந்தா.**



**கலாபன் வாஸ்**



தங்கத் தேர் 9 கவிதைகள்

# பனிமயமே! அருள்துளியே!!



மறைவாக்கிய தவமே
வருவாய்!
இறைபாக்கிய வரமே
தருவாய்!

ஏழுகடற் துறை
ஏகஅடைக்கலமே!
தங்க ரதம் மேல் எழுவாய்
எங்க மனம் மீது அமர்வாய்!

"இதோ உன் தாய்" - எமை
இமையென காப்பவளே
இமயமெனும் துயர்களை
இனிமையாய்க் கடந்தவளே!

வங்க கடலன்னை ஆதாரம் நீயே
பொங்கு கடலலை சேதாரமேது?
எங்கள் பாடுகளின் ஆதரவும் நீயே
நாங்கள் பாடும் தேவாரப் பனிமயமே!

ரத வீதியில் கண்களாயிரம்
காட்சிகள்
பக்தி மிகுதியில் வார்த்தை கோடிகள்
சாட்சிகள்
முத்துக்குளித்துறையின் முத்தாரமே!

தேர் பூட்டிய தொன்மை
பார் நீட்டிய உண்மை - நமது
பாண்டியாபதி தலைமை!

கண்டம் கடல் கடந்து - உனை
காண வந்தோம் - எங்கள்
காட்சிமாறுமென - உனை
தாட்சி அடைந்தோம் - உங்கள்
மாட்சியால் மீட்சியே தஸ்நேவிஸ்!

வீணை மீட்கும் கரங்களில் - நெய்தல்
திணைக்கு அம்பாசுரங்கள் நீயே
பானையில் அனுதினம் அமுத
வரங்கள் தாயே!

வேதங்கள் பாடும் உச்சம் நீ - உந்தன்
பாதங்கள் நாடும் எச்சம் நானே

ஆழிபுத்திரன்



பனிமய பங்குத் தந்தையர் 1



# அருள்தந்தை இரத்தினராஜ்

கடந்த 25 ஆண்டுகளில் பனிமயம் இதழை வளர்த்தெடுத்த பெருமையில் பனிமய அன்னை பேராலயப் பங்குத் தந்தையருக்கும் பெரும் பங்குண்டு. பனிமயம் இதழின் நிறுவனர்கள் என்னும் புகழுக்குச் சொந்தக்காரர்கள் அருள்தந்தையர் பவுல் இராபின்ஸ்டன் அவர்களும், அப்போது உதவிப் பங்குத் தந்தையாயிருந்த ஜான் சுரேஷ் இருவருமே. கடந்த 1999ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பனிமயத்தின் முதல் இதழ் வெளிவந்தது.

ஆனால், அடுத்த நான்கு மாதங்களிலேயே அருள்தந்தை இராபின்ஸ்டன் மாற்றலாகிவிட, புத்தாயிரத்தின் முதல் மாதத்தில் (2000 ஜனவரி) அருள்தந்தை ஜோசப் இரத்தினராஜ் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். திருத்தலத்தின் அனைத்துப் பணிகளோடும், பனிமயம் இதழை வளர்க்கும் கடமையையும் தன்மீது ஏற்றுக்கொண்டார்கள்.

இதழின் தோற்றத்தை எழில் மிக்கதாக மாற்றினார்கள். பொறுப்பாசிரியர் கலாபன் வாஸ் அவர்களோடு இணைந்து இதழின் தரம் உயர்ந்து நிற்கச் செய்தார்கள். அன்னாரின் காலத்தில்தான் பொ.ம. ராசமணி, ஹெலன் ஞானப்பிரகாசம், ஏ.எஃப். மாறன், செல்வராஜ் மிராந்தா, கலியாவூர் தாசன், தாமஸ் வாஸ் போன்ற சிறந்த படைப்பாளர்களின் எழுத்துகள் இதழை அலங்கரித்தன. இருபது ஆண்டுகளுக்கு முன்பே நெய்தல் அண்டோவின் எழுத்துக்களையும் அவர்கள் ஊக்குவித்து, இந்நாளில் அவரும் ஒரு சிறந்த படைப்பாளியாய் மாற வித்திட்டுள்ளது வியப்பூட்டுகிறது.

தந்தை இரத்தினராஜ் அவர்களின் மாதாந்திர ஆசிரியர் பக்கங்கள் ஊக்கமூட்டுவதாய் அமைந்தன. சில வேளைகளில் தந்தை அவர்களின் இதர எழுத்துகளும் நம் கவனத்தை ஈர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, 2003 டிசம்பர் இதழில் “கடவுளும் விஞ்ஞானமும்” என்னும் தலைப்பில் ஓர் உண்மைக் கதையை ஆங்கிலத்திலிருந்து தழுவி எழுதியுள்ளார்கள்.

மரியியல் கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், திருத்தலச் செய்திகள் என ஏராளம் இருந்தாலும், அரசியல் விழிப்புணர்வுக் கட்டுரைகளும் இதழில் இடம் பிடித்து நம்மை வியக்க வைக்கின்றன. பல உளவியல் நூல்களை எழுதிய சலேசிய அருள்தந்தை தோமை ராஜன் அவர்கள் பனிமயத்திலும் உளவியல் தொடர் ஒன்றை எழுதியுள்ளார்கள். சிறியோரை ஈர்க்கும் வண்ணம் புனித பிரான்சிஸ் சவேரியாரின் வரலாறு படக் கதைத் தொடராக வந்து குழந்தைகளைக் குதூகலிக்க வைத்துள்ளது.

நான்கு மாதக் குழந்தையான பனிமயத்துக்குப் பாலூட்டி, வளர்த்து, அதனை நடைபோட வைத்த பெருமை அருள்தந்தை இரத்தினராஜ் அவர்களையே சாரும். பனிமயத்தின் வெள்ளி விழா ஆண்டில் அவர்களை நன்றியோடு நினைவுகூர்கிறோம். தற்பொழுது ஆஸ்திரேலியாவின் பெர்த் மறைமாவட்டத்தில் இறைபணியாற்றும் தந்தை அவர்களுக்குப் பனிமய அன்னையின் ஆசிகளை வழங்குகிறோம்.

அருள்பணி. குமார்ராஜா

# விவிலியப் போட்டி 107

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருப்பாடல் 61 - 66

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. ........................................ நீரே என் இறைவன்.
2. நான் உமது கூடாரத்தில் ........................................ தங்கியிருப்பேன்..
3. கடவுள் முன்னிலையில் அவர் ........................................ வீற்றிருப்பீராக.
4. மக்களே! ........................................ அவரையே நம்புங்கள்.
5. ........................................ என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்.
6. ........................................ உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்.
7. என் ........................................ இவ்வண்ணமே உம்மை போற்றுவேன்.
8. அவரது ஆயுள் ........................................ நீடிக்கட்டும்.
9. கடவுளே சீயோனில் ........................................ புகழ்ந்து பாடுவது ஏற்புடையது
10. உமது பெயரை என்றென்றும் ........................................ .

*குறிப்பு : விடைகளைக் கோர்த்தால் புதிய ஆண்டிற்கான இறைப்புகழ்ச்சி மாலை தொடரும்....*

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.01.2024**

# விவிலியப் போட்டி 106

**டிசம்பர் 2023** விடைக்குறிப்புகள்

## திருப்பாடல் 56 - 60

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டவரே | திபா 57:10 |
| 2. | உமது | திபா 56:8 |
| 3. | பேரன்பால் | திபா 59:10 |
| 4. | எங்களை | திபா 60:1 |
| 5. | எதிர்கொள்ள | திபா 59:10 |
| 6. | எழுந்து வாரும் | திபா 59:5 |
| 7. | ஏனெனில் | திபா 59:17 |
| 8. | நீரே | திபா 59:9 |
| 9. | என் | திபா 57:7 |
| 10. | கடவுள் | திபா 60:6 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், *குடும்ப அட்டை எண்* மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** *அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.*

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

## விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 201

### I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து

**சரியான விடை எழுதியவர்கள் : 119**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

## பரிசு பெறுபவர்கள் : 4

1. அந்தோனியார் அன்பியம் — *ரீனா மொறாயிஸ்*
2. அன்னை தெரசா அன்பியம் — *ரொவீனா*
3. அ. வேளாங்கன்னி அன்பியம் — *டென்சி*
4. கிறிஸ்தரசர் அன்பியம் — *செலஸ்கி கிளமன்ட்*

## பாராட்டுக்குரியவர்கள் : 114

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா சார்லஸ்
6. லூக்காஸ் சகாயம்
7. சரோஜா
8. ஜெயா

**அன்னை தெரசா**
9. சுரேஷ் பிரேமா
10. ரெயிசா சுஜய்
11. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
12. நான்சி
13. ஷ்ரேனா
14. ஜொசிட்டா
15. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
16. ரெக்ஸ் கிரீன்வெல்
17. ஜெகன் பெமினா
18. லூரட் வசந்த்
19. ஜூலியட் சாவியோ

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
20. இருதயம்மாள்
21. கார்லூஸ் பெனட்

**திவ்யபாலன் அன்பியம்**
22. சகாயராணி தனராஜ்
23. பிரின்சி

**பாத்திமா மாதா**
24. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
25. ஜெசிந்தா கான்ஸ்டன்
26. ராஜா ரீனா
27. ஜெனிட்டா மைக்கேல்
28. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**
29. பாப்டிஸ்டா
30. பிரைட்டன் ஜெரோஃபின்
31. இருதயம்மாள் கொன்சால்
32. சித்ரா மோத்தா
33. தமிழ்ச் செல்வி புரோ

**ஜெபமாலை மாதா**
34. சகாயம்மாள் பெனடிக்ட்
35. கல்;யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
36. அந்தோனிசாமி
37. ட்ரைபேனா
38. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
39. வெனிட்டாள்
40. எலிஜா இம்மானுவேல்
41. ஜான் ஆல்ட்;ரின்
42. சார்லட் பிராங்க்
43. ஜெயா அகஸ்டின்
44. ஜெசிமா கிளாரன்ஸ்
45. ரஸ்கின் வசந்தா
46. சாந்தி ஆல்ட்ரின்
47. ஜோ ட்ரினிஷா
48. ஜூலியஸ் தல்மேதா
49. அல்பின்
50. ரஜூலா அலாய்
51. டெய்சி ஜோ

**குழந்தை தெரசா**
52. கிறிஸ்டி லிஸ்டன்
53. பெனி மொறாயிஸ்
54. பெர்லி பென்சன்
55. ஜீசஸ் ஜூலி

**குழந்தை இயேசு**
56. மோனிகா செபாஸ்டின்
57. அந்தோனியப்பா பிச்சம்மாள்
58. எமல்டா
59. பிரான்சிஸ் வாஸ்
60. ஆரோக்கியராஜ் ஹெலினா
61. ரதி பிரதீப்

**மணல் மாதா**
62. கெயிட்டன் ஃபர்னான்டோ
63. ரொசாரி கோமஸ்
64. ஹெபிட்டா

**லூர்து மாதா**
65. ஜெனோ சேவியர்
66. ரம்யா
67. ரோஸ்லின் தாமஸ்
68. சாண்டினா
69. ஆலிவர் வி. ராயன்
70. சகாயராணி
71. ஃபிலோ கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
72. ஜோசபின் பர்னாந்து
73. ஷீபா

**பனிமய அன்பியம்**
74. மெர்சி கோமஸ்
75. ஜூடு ரதி
76. சான்ட்ரா ஜெஃப்ரின்

**பவுலடியார்**
77. ராஜா ரோஸ்லின்
78. ஜான்சன் ஒஃபிலியா
79. லீமா ரோஸ்
80. ஹெலினா
81. காத்தரினா டிவோட்டா

**பரிபூரண மாதா**
82. சப்னா கின்ஸ்டன்
83. மெடோனா

**பொம்பெயி மாதா**
84. மாத்யூ கர்டோசா
85. தெரசா பிரகாஷ்
86. ஆலன் ஜாஃப்ரியோ
87. டிஃபானி அண்டோ
88. லூடா கான்ஸ்டன்
89. ஜான்சிராணி அமல்ராஜ்
90. ஸ்நோ ஆல்பிரிக்

**இராயப்பர்**
91. டெய்சி
92. நேவிசம்மாள்

**சவேரியார்**
93. டெலிலா அமலன்
94. ரூபா மனுவேல்
95. அண்டன் சகாயம்
96. ஜென்சி ஜோர்னஸ்
97. அனுஷ்யா பீட்டர்

**செபஸ்தியார்**
98. அந்தோனியம்மாள் டென்சிங்
99. ஜெசிலா சேவியர்
100. அஸ்கேனியஸ்
101. பிரவீணா

**சிந்தாத்திரை மாதா**
102. நேசம்
103. ஜூடி ஆரோக்கியராஜ்
104. ராஜி ஜஸ்டின்
105. டி.எல்.ஜே.பி. ராயன்
106. சில்வியா அன்டோனட்

**சிறுமலர் அன்பியம்**
107. விஜி சகாயராஜ்
108. எல்சிட்டா ஆனந்த்
109. செலஸ்டின்
110. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
111. கிறிஸ் ரிஜோ
112. ரூபி கொர்னேலியுஸ்
113. ஹேமலதா
114. மோனிஷா காஸ்பின்

**திருச்சிலுவை**
115. சரோலின் கில்டன்
116. ரமணி டிவோட்டா

**வியாகுல மாதா**
117. கெலிண்டன்
118. ராஜா ஜர்லன்
119. லூர்து லினட்

## பரிசு பெறுபவர்கள் : 4

120. சிப்பிகுளம் — *ஜெனசிஸ்*
121. மதுரை — *சகோ. ஜான்சி மேரி*
122. தூத்துக்குடி இரத்னபுரம் — *மரிய தங்கம்*
123. பெத்தனி இல்லம் — *அருள்சகோதரி லோரா மேரி*

## பாராட்டுக்குரியவர்கள் : 78

**ஆலந்தலை**
124. மரியம்மாள்
125. பொன்சேகா
**வீரபாண்டியன்பட்டணம்**
126. ரேச்சல் ராயன்
127. ஸ்வர்ணா மிசியஸ்
**ஆறுமுகனேரி**
128. தொம்மை அந்தோனி
129. ஜெயராணி
**ஏரல்**
130. ஜாய்ஸ் ரத்தினம்
**புதியம்புத்தூர்**
131. ஹெலன் அன்னமணி
**சென்னை**
132. கமலஜோதி ஜெயசீலன்
133. ஒஃபிலியா தாமஸ்
134. எட்வர்ட் அமலி
**செங்கல்பட்டு**
135. மார்கரட் மேரி
**பாளையங்கோட்டை**
136. பிரேமா குணசீலன்
137. ரோசி
138. மிக்கேல் அமல்
139. ஸ்வர்ணா ஃபர்னான்டோ
**சங்கரன்கோவில்**
140. செல்வராணி
141. ஆலன் ஜாக்ப்ரியோ
142. சுவாமிநாதன்
**பேட்டை**
143. ஹெலனிட்டா
**கயத்தாறு**
144. அமல்ராஜ்
**பெரியகுளம்**
145. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
146. ரொசாலி
147. மரிய மதலேன்

**கோயம்புத்தூர்**
148. ராஜேந்திரன் அருள்
149. சத்யா சேவியர், சூலூர்
**பல்லடம்**
150. பிரான்சிஸ் ஆர்லன்
**திருச்சி**
151. மோனிட்டா கிறிஸ்டி
152. மேத்யூ விவேக்
153. டோனி
154. ஜான்சி ராணி
**சேலம்**
155. செல்வ நாயகி
**மதுரை**
156. சகோ. அப்போலி;ன்
**வடக்குத்து**
157. ஹென்றிதாஸ்
**பரமக்குடி**
158. சைமன் சாந்தி

<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>

**திரு இதயங்களின் பேராலயம்**
159. ரஜூலா ஜான்போஸ்கோ
160. பீட்டர் ஜெயந்தி
161. கிரேட்டா ராஜா
**குருஸ்புரம்**
162. ஆசீர்வாதம்
163. பௌவுசி ஜோ மைக்கேல்
164. ஜான்சி மெண்டிஸ்
165. பிளசி செல்வராஜ்
166. டெல்பின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
167. சுகிர்தா
168. ஷெரினா
169. சகாயம்
170. செல்வி ஆன்சலி
171. ரெபிஷா
**யூதா ததேயு கோவில்**
172. ரோஸ் சேவியர்
173. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
174. யூஜினியா கதலியா
175. பெனிட்டன்
176. ரியாலினோ
177. அன்சிட்டா
178. அனிதா
179. பேபி வால்டர்
180. பின்டன் சோஃபியா
181. ஷாந்தினி
182. ரமேஷ் நர்மதா
**லூர்தம்மாள்புரம்**
183. மெர்சி
184. ஜெயபாலன் டெலிலா
**சார்லஸ் கோவில்**
185. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
186. செக்கரியா சாமுவேல்
187. ஜொசி குணபாலன்
188. வினிஃபிரட் பிரின்ஸ்டன்
189. ஜெசிந்தா பர்னாந்து
190. ரஃபேல் ரூபர்ட்
191. லிஜியா பர்னாந்து
**இஞ்ஞாசியார்புரம்**
192. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
193. விர்ஜின்
194. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
195. சோஃபியா விஜய்
196. இருதயம்மாள் கபிரியேல்
197. சுஜாதா மகேஷ்
198. மென்சிலா லொயோலா
**திரேஸ்புரம்**
199. கோல்வின் ஜேசுராஜ்
**பாத்திமா நகர்**
200. மேரி ஹேம்லின்
201. ஜெனோஃபியா



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 198**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 201**

*மாதம் ஒரு மாதா படம் : 44*



R. *அஷ்வின் ஜோ*
புனித அந்தோனியார்
ஆலயப் பங்கு

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 54)

## ஜனவரி - 2024

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்முனைவர் குமார்ராஜா** | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி சைமன் ஆல்டஸ்** | 74485 18127 |
| களப் பணியாளர் | : | **சகோதரர் ஆல்ட்ரின்** | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 07.10 - 07.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2024

  உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

503. மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காகக் கிறிஸ்துமஸ் பாடல்கள் நமது பேராலயத்தில் 03.12.2023 ஞாயிறு பிற்பகல் 01.00 முதல் 04.00 வரை ஒளிப்பதிவு செய்யப்பட்டன. இந்தப் பாடல்கள் மாதா தொலைக்காட்சியில் 24.12.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஒளிபரப்பப்பட்டன.

504. டிசம்பர் மாதத்துக்கான விவிலியப் பாசறை (எண்: 100) 05.12.2023 செவ்வாய் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் “திருமண ஆசிர்வாதங்கள்” என்ற தலைப்பில் நடைபெற்றது. தம்பதியராக 18 மண இணையர்களும், மற்றவர்களும் சேர்ந்து மொத்தம் 68 பேர் கலந்துகொண்டனர்.

505. பாலன் பிறப்புக்கான கொடியேற்றம் 15.12.2023 வெள்ளியன்று இரண்டாம் திருப்பலி முடிந்ததும் நடைபெற்றது.

506. லூர்து மாதா இளம்பெண்கள் சபையின் 4ஆவது ஆண்டுவிழா 17.12.2023 ஞாயிறு காலை 06.30 திருப்பலியில் கொண்டாடப்பட்டது. புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றதுடன், புதிய உறுப்பினர்கள் நாடா அணிந்து சபையில் சேர்ந்தனர்.

507. “குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக” **பனிமய நோன்பு வழிபாடு** (38) 17.12.2023 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 மணிக்குத் திருப்பலியுடன் தொடங்கி, பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. அதற்கு ஆயத்தமாக 11.12.2023 முதல் 7 நாள்களுக்கு நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நற்கருணை சிற்றாலயத்தில் நோன்பு ஆராதனை நடைபெற்றது. 180 தம்பதியர்களுக்காக சிறப்பு இறைவேண்டல்கள் ஏறெடுக்கப்பட்டன.

508. பேராலயப் பங்கின் “பனிமய இளையோர்” முன்னெடுப்பில் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சிகள் 25.12.2023 மாலை 06.30க்குப் பேராலய வளாகத்தில் நடைபெற்றன.

509. பங்கின் **தம்பதியருக்கான ஆசிர்வாதத் திருப்பலி** 28.12.2023 வியாழன் மாலை 05.30க்கு நடைபெற்றது. பொன்விழா, வெள்ளி விழா காணும் தம்பதியரோடு, மற்ற தம்பதியருக்கும் ஆசியும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

510. நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட திருப்பலி 29.12.2023 வெள்ளி காலையில் மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

511. பெருமழை காரணமாக வீடுகளில் தண்ணீர் சூழ்ந்ததால் ஏறக்குறைய 50 பேர் நமது எஸ்கலின் இல்லம், ஜே.எம்.ஜே. அரங்கம் இரண்டிலும் 3 நாள்கள் பராமரிக்கப்பட்டனர்.

# பங்கில் நிகழ்ந்தவை



## வரவேற்கிறோம்

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 140. | கார்மலின் டெஸ்ஸா | ஹென்றிக்ஸ் - இன்பென்டா | 26.11.2023 | மணல் மாதா |
| 141. | ஜேடன் பால் ராயர் | வினோஜ் - அனிஷா | 25.12.2023 | இராயப்பர் |
| 142. | அமேரா ஃபெலிசியா | பிராங்க் - எழில் அரசி | 25.12.2023 | பவுலடியார் |
| 143. | ஷிபு செபகபிரியேல் | சந்தனசாமி - லொயோலா டார்டினி | 31.12.2023 | இராயப்பர் |
| 144. | ஸ்னோ கிரேஸ்லின் | ஜஸ்டின் - திரேசம்மாள் | 31.12.2023 | திருச்சிலுவை |



## ஆசி கூறுகின்றோம்

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 127. | கெல்வின் - யுவாஞ்சலின் | இரக்கத்தின் மாதா | 01.12.2023 |



## இறைவனைப் போற்றுகிறோம்

### 3. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 41 | அமலன் | டெலிலா | 27.11.2023 | சவேரியார் |



## செபிக்கின்றோம்

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 181. | கில்டா மஸ்கரனாஸ் | சேவியர் பர்னாந்து | 02.12.2023 | வியாகுல மாதா |
| 182. | அருள்சாமி | ஜான்சி பொன்சேக்கா | 03.12.2023 | காவல் தூதர் |
| 183. | ஜெயராய் வில்லவராயன் | எஃப். ஏ. ஜான்சன் | 08.12.2023 | சூசையப்பர் |

## நடைபெறவிருப்பவை

- 05.01.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- 06.01.2024 ஆண்டின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- 07.01.2024 ஞாயிறு இரண்டாம் திருப்பலியில் நடைபெறவிருக்கிற பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுத் தேர்தல் பற்றிய விளக்கவுரை வழங்கப்படும்.
- 12,13.01.2024 வெள்ளி, சனி இரு நாள்களும் பொதுநிலையினர் பணியகத் தொண்டர்கள் அனைத்து அன்பியங்களையும் சந்தித்து, மேய்ப்புப் பணிக்குழுத் தேர்தல் பற்றி விளக்கம் அளிப்பார்கள்.
- 21.01.2024 ஞாயிறு முற்பகல் அன்பிய வழிகாட்டிகளுக்கான தேர்தல் நடைபெறும். பிற்பகலி;ல் நிதி;க்குழு, செயற்குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும்.
- “திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்காக” **பனிமய நோன்பு வழிபாடு** (39) 21.01.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 155. | 09.01.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | புத்தாண்டு ஆசிகள் |
| 156. | 16.01.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | ஆசிகள் பொங்குக! |
| 157. | 23.01.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இறைவனின் வாக்குறுதிகள் |
| 158. | 30.01.2024 | செவ்வாய் | அருள்பணி. சைமன் ஆல்டஸ் | வழிகாட்டும் இறைவார்த்தை |
| 159. | 06.02.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | குணமாக்கும் இறைவார்த்தை |



# பனிமய சாட்சியம்

**பனிமய சாட்சியம் : 84**

## கிறிஸ்பின், தூத்துக்குடி.

நான் கல்லூரி படித்து முடித்த மாணவன். என் கல்லூரி படிப்பிற்கு பின் என் நீண்ட கால இலட்சியமான விமானியாகப் படிப்பதற்கு அமெரிக்கா செல்ல விரும்பினேன் அதற்காக விசா எடுப்பதற்காக சென்னை அமெரிக்க தூதரகத்துக்கு நேர்காணலுக்குச் சென்றேன். அதில் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மனமுடைந்து போனேன். அதன்பின் குடும்பமாக பனிமய மாதாவிற்கு நவநாள் 9 வாரம் தொடங்கினோம். இரண்டாவது வாரம் நவநாளின்போது ஒரு வயதான அம்மா செபவேளையில் என்னை தேடி வந்து ஒரு அமலோற்பவ மாதா நாடாவை கொடுத்து “இந்த நாடாவை உன் பர்சில் வைத்துக்கொள். மாதா எப்போதும் உன் கூடவே இருப்பார்கள்” என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்கள். அந்த அம்மா மாதாதான் என்று நான் நம்புகிறேன். அதன்பின் இரண்டாவது முறையாக ஹைதராபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு நேர்காணலுக்கு சென்றேன். இரண்டாவது முறை அங்கீகாரம் செய்யப்பட்டேன். இந்த நிகழ்வுகள் எல்லாம் மாதாவின் அருளால் புதுமையால்தான் என்று நான் கருதுகிறேன். மாதாவுக்கு கோடான கோடி நன்றி மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்! பனிமயத் தாய்க்கு நன்றி!

---

**பனிமய சாட்சியம் : 85**

## குமாரி கவிதா, சென்னை

அண்மையில் சென்னையிலிருந்து தனது தந்தையுடன் நமது பேராலயம் வந்திருந்தார் திருமதி. கவிதா. அவரது கணவர் லாரன்ஸ் சகாயராஜ் லண்டனில் பணியாற்றுகிறார். அவரது அண்ணன் ஆண்ட்ருஸ் அடிக்கடி தூத்துக்குடி பனிமய அன்னையின் திருத்தலத்துக்கு வருவதுண்டு. அவரது பரிந்துரையால் கடந்த ஜுன் மாதம் நமது திருத்தலத்துக்கு வந்திருக்கிறார். அவரது ஒரே மகள் மெர்லின் ஆக்னஸ் 12ஆம் வகுப்பில் 87 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தார். தங்கள் மகளை நல்லதொரு எஞ்சினியரிங் கல்லூரியில் சேர்க்கவேண்டும் என்பதுதான் பனிமயத் தாயிடம் கவிதா வைத்த ஒரே வேண்டுகோள். வியத்தகு முறையில் அடு;த்த நாளே மகளுக்குப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டது. அதுவும், தாம் வேண்டியதற்கும், விரும்பியதற்கும் மேலாகவே, புகழ்பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் குரோம்பேட்டை எம்.ஐ.டி. பொறியியல் கல்லூரியில் மகள் விரும்பிய பி.ஈ. கம்ப்யூட்டர் எஞ்சினியரிங் குரூப் கிடைத்துவிட்டது. எனவே, மீண்டும் ஒருமுறை பனிமயத் தாயின் திருத்தலம் வந்து நன்றிக் காணிக்கை செலுத்தினார். பனிமய அன்னையே நீர் வாழ்க!

---

# பனிமயம்
## வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் (2)

இறைவனின் பேரிரக்கத்தால், நமது பனிமயம் இதழின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் பின்வரும் முறையில் கொண்டாடப்படவுள்ளது.

1. **ஜனவரி.** புத்தாண்டு காலை 08.00 மணித் திருப்பலியில் (**01.01.2024** திங்கள்) மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் பனிமயம் இதழின் முதல் பொறுப்பாசிரியர் திருமிகு. கலாபன் வாஸ், இணை நிறுவனர் முனைவர் அருள்பணி. ஜான் சுரேஷ் இருவருக்கும் **"பனிமயம் வெள்ளிவிழா விருதுகளை"** வழங்குவார்கள்.
2. **பிப்ரவரி.** பனிமயம் இதழின் **"எழுத்தாளர்கள் - வாசகர்கள் சந்திப்பு"** 11.02.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெறும். எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.
3. **மார்ச்.** பனிமயம் இதழின் **"விவிலியப் போட்டிப் பங்கேற்பாளர்கள்"** ஒன்றுகூடல் 03.03.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கில் நடைபெறும்.
4. **ஏப்ரல். பனிமயம் வெள்ளி விழா மலர்** வெளியீட்டு விழா **07.04.2023 ஞாயிறு** மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கில் நடைபெறும்.

வெள்ளி விழா மலருக்குப் படைப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள்

- கவிதைகளை "அம்மா" என்னும் தலைப்பிலும் (16 முதல் 20 வரிகளில்)
- கட்டுரைகளை "தங்கத் தாரகை" என்னும் தலைப்பிலும் (400 சொற்களுக்கு மிகாமல்)
- சிறுகதைகளை "அன்னையைத் தேடி" என்னும் தலைப்பிலும் (550 சொற்களுக்கு மிகாமல்)

எழுதி எதிர்வரும் **31.01.2024**க்குள் அனுப்பி வையுங்கள்.

*வாருங்கள், இணைந்து கொண்டாடுவோம்*
*நம் பனிமயம் இதழை!*

**அருள்பணி. குமார்ராஜா**
மேலாளர், இதழாசிரியர்

# முதல் வருட நினைவஞ்சலி

"நான் உடலால் உங்களோடு இல்லாவிடினும் உள்ளத்தால் உங்களோடு இருக்கிறேன்."
(1கொரி 5:3)

தாய் மடியில்
13.05.1939



இறைமடியில்
14.01.2023

## லாசரம்மாள் ரவேல்

வயது : 83

திருப்பலி
13.01.2024 சனிக்கிழமை - காலை 6.30 மணி
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

*என்றும் உங்கள் நினைவோடு நாங்கள்*


மக்கள், மருமக்கள்
பேரன்கள், பேத்தி, பூட்டன்
மற்றும் குடும்பத்தினர்

21, மனுவேல் ஜேக்கப் லேன்,
தூத்துக்குடி - 1.

விண்ணக வாழ்வின்

## 19ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**11.01.2024**



பிறப்பு
15.10.1940

இறப்பு
11.01.2005

# J. அந்தோணிசாமி பர்னாந்து

*வயது : 65*

என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*

*மகன் :*
**A. சேசையா பர்னாந்து**

*மருமகள் :*
**J. ஜெயஸ்ரீ பர்னாந்து**

*மகன் :*
**A. ஜாய்சன்**

*மருமகள் :*
**J. பமிலா**


*பேத்தி :* **J. ரேச்சல்**

*பேரன்கள் :*
**J. ஜெசாந் பர்னாந்து** **J. ஜெர்விந் பர்னாந்து**

*மற்றும் குடும்பத்தினர்*

## விண்ணுலகில் இறைவனில் இணைந்த வெள்ளிவிழா கொண்டாடும் அன்பு மகனுக்கு 25 வருட நினைவஞ்சலி

# C.T. ஆலன்



தாயின் மடியில்
09.01.1978

இறைவன் திருவடியில்
11.01.1999

**உறவுகளோடு : 21 ஆண்டுகள்**

**"நான் உடலோடு உங்களோடு இல்லாவிடினும் உள்ளத்தால் உங்களோடு இருப்பேன்"**

எம் இல்லத் தோட்டத்தில் பூத்த வண்ண மலரே, எம் இதயம் வாசம் செய்த நறுமலரே, எம் குலக் கண்மணியே குணநலப் பெற்றோரின் தலைமகனே, முத்து மாநகரில் பிறந்த நல்முத்தே, ஜுபிலி ஆண்டு 25 ஆகியும் நின் நினைவுத் தோட்டத்தில் உன்னைப் பற்றிய எண்ணப் பூக்கள் உதிரவே இல்லை. உன் கண் அழகு, செம்மாந்த நடை கள்ளமில்லா சிரிப்பு உன் முகவடிவு இவையாவும் எங்களால் மறக்க முடியாது. அப்பா, தங்கை, தம்பிகளுடன் பண்போடும் பாசத்தோடும் அன்பு மழை பொழிந்தாய்.

எங்கள் திருமண நாளன்று விடிகாலை வேளை 05.01.1999 அன்று வாழ்த்து கூறிய தங்கமகனே உன் குரல் காதில் புல்லாங்குழல் இசையாக கேட்டுக் கொண்டிருக்கிறது. எம் காலத்தினை உன் நினைவிலேயே கழித்திடுவோம்.

இறைவா நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்திடும்.

*பிரிவால் துயருறும்*

அன்பு அப்பா, அம்மா : சாதானந்தம், ஜெயந்தி
தங்கைகள் : ஆன்சி, ஜெகன் மருமகள் : வன்சிகா
ஜென்சி - அற்புதராஜ் மருமக்கள் : தியா - ஆலன்
ஏக தம்பி : நோயல் - ஜீவிதா
பிள்ளைகள் : இவானா இயல், எல்னதான் இன்பா

SHINY Ph : 98421 31493